# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



-229

பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

நகர் ஊரமைப்புத்துறை
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு.ந.ரா.தியாகராஜன், பி.டெக்.,

ந.க.எண். **2603/2020/** ஈமா 2 நாள். **16.03.2021**

பொருள்: **மனைப்பிரிவு** - நகர் ஊரமைப்புத்துறை - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - ஈரோடு மாவட்டம் - பெருந்துறை வட்டம் - கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி மற்றும் கருமாண்டிசெல்லிபாளையம் கிராமம் - ரீ.ச.எண்.576/1A, 577/1A1-ல் 2.39 ½ ஏக்கர் (அ) 9695.00சமீ பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி ★ ஈரோடு மாவட்டம் ★ 18 MAR 2021

பார்வை:

01. செயல் அலுவலர், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 458/2020 நாள்.16.11.2020
02. மனுதாரர் திரு.R.கந்தசாமி, ஈரோடு என்பவர் விண்ணப்பம் பெறப்பட்ட நாள். 2.12.2020 (Online Ref.No.8810 dt.4.11.2020)
03. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2603/2020/ஈமா2 நாள்.28.12.2020
04. மனுதாரர் திரு.R.கந்தசாமி, ஈரோடு கடிதம் நாள். **11.02.2021** (சாலை பகுதிகள் மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.648/2021 நாள்.29.01.2021 மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.649/2021, நாள்.29.01.2021 )
05. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.31.01.2020.
06. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.05.2017.
07. வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்கள் கடிதம் எண்.அ4/2020/2020 (106), நாள். 17.11.2020.
08. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020.
09. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
10. அரசாணை எண்.141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.23.09.2020

11. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 30.08.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1 நாள் 08.09.2017.
13. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.24.02.2021
14. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள். 05.03.2021

உத்தரவு :

01. பார்வை 1-ல் கண்டுள்ள செயல் அலுவலர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 4-ல் காணும் மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஆகியன உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திரம் ஆவணம் எண்.648/2021 நாள்.20.01.2021 மற்றும் மின் பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-ற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திரம் ஆவணம் எண்.649/2021 நாள்.29.01.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

02. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ஈமா எண்.54/2021** என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

03. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

04. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

05. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. (a) பார்வை 8-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 5-ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பில் நிலப்பயன்மாற்ற கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் மனுதாரரிடமிருந்து வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| 0217 | Urban Development |
| 60 | Other Urban Development schemes |
| 800 | Other Receipts. |
| AS | Receipts under Land use conversion charges |
| 27 | Non Taxation fees – 09 collections |
| | (DPC: 0217-60-800-AS-2790) |

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

**இணைப்பு** :

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் **ம.வ./ஈமா எண்.54/2021** மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -3 தொகுப்பு
2. தானப்பத்திரம் எண்.648/2021, 649/2021-ன் அசல் ஆவணம்

**பெறுநர்**

செயல் அலுவலர்,
கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி,
பெருந்துறை வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

**நகல் : மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)**

திரு.R.கந்தசாமி,
த/பெ.ரங்கசாமி,
80/1 R.S.ரோடு,
பெருந்துறை வட்டம்,
ஈரோடு - 638 052

**நகல் (தகவலுக்காக)**

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No 1 A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai - 600008.

## கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர் : திரு.இரா. கிருஷ்ணன்

நி.மு.எண். 458/2020/இ.

நாள். 05.08.2021.

பொருள் : மனைப்பிரிவு – ஈரோடு மாவட்டம் – பெருந்துறை வட்டம் – கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி – கருமாண்டிசெல்லிபாளையம் கிராமம் – வார்டு எண்.04 வெள்ளியம்பாளையம் – பழைய க.ச.எண்.354–2–3, 354–1, 355–1–2 – ரீ.ச.எண்கள். 576, 577/1, இதன் உட்பிரிவு எண்.576/1 A, 577/1A1புஞ்சை 2.39 1/2 ஏக்கர் பரப்பளவில் விஸ்தீரணமுள்ள இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு – ஏற்படுத்திக் கொள்ள உரிய அங்கீகாரம் வழங்கி – ஆணையிடுவது.

பார்வை :

1.திரு.R.கந்தசாமி த/பெ.ரங்கசாமி அவர்களின் விண்ணப்பம், நாள். 09.11.2020.

2. இவ்வலுவலக கடித ந.க.எண். 458/2020, நாள். 16.11.2020.

3. ஈரோடு நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம், ந.க.எண். 2603/2020 ஈ.மா–2, நாள்.23.12.2020.

4. பெருந்துறை சார்பதிவாளர் தானசாசனம் பத்திரம் ஆவணம் எண். 648/2021, நாள். 29.01.2021. 649/2021, நாள்.29.01.2021.

5. ஈரோடு நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம், ந.க.எண். 2603/2020 ஈ.மா–2, நாள்.13.03.2021.

6. இவ்வலுவலக கடித ந.க.எண்.458/2020 நாள். 06.05.2021.

7. கருமாண்டிசெல்லிபாளையம் தொகுப்பு இளநிலை பொறியாளரின் கடிதம், நாள்.17.05.2021.

8.இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.101/2021, நாள்.17.05.2021.

9.இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.102/2021, நாள்.17.05.2021.

10. இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.112/2021, நாள்.17.05.2021.

11. இவ்வலுவலக கடித ந.க.எண்.397/2019, நாள். 11.06.2021.

12. இவ்வலுவலக கடித ந.க.எண்.397/2019, நாள்.11.06.2021

13. பெருந்துறை சார்பதிவாளர் கடித ந.க.எண். xxx/2021, நாள். 18.06.2021.

14.கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி பம்ப் மெக்கானிக் அவர்களின் கடிதம் நாள்.18.06.2021

15. தொடர்புடைய ஆவணங்கள்.

***************

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் R.S ரோடு நகரில் வசிக்கும் திரு.R.கந்தசாமி த/பெரங்கசாமி என்பவர் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டிசெல்லிபாளையம் கிராமம், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 வெள்ளியம்பாளையம் பழைய க.ச.எண்.354–2–3, 354–1, 355–1–2 – ரீ.ச.எண்கள். 576, 577/1, இதன் உட்பிரிவு எண்.576/1 A, 577/1A1புஞ்சை 2.39 1/2 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவுகள் வரையறை செய்து உரிய ஆவணங்களுடன் மனைப்பிரிவு அங்கீகாரம் செய்து கொடுக்கக் கோரி, பார்வை 1ல் காணும் மனை உரிமைதாரர் இவ்வலுவலகத்தில் 09.11.2020 அன்று நேரில் சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதத்துடன் மனுதாரரது விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை இணைத்து ஈரோடு நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை 3ல் காணும் ஈரோடு நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதத்தில், மனைப்பிரிவுக்கான தார் சாலைகள் அமைக்கப்பட்டு மழைநீர் / கழிவு நீர் வடிகால் வசதி குடிநீர் வசதிக்கான மேல்நிலைத் தொட்டி, தெருவிளக்கு வசதி ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் விபரத்தினை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பார்வை 4ல் கண்டுள்ள படி பெருந்துறை சார்பதிவாளர் தானசாசனம் பத்திரம் ஆவணம் எண். 648/2021, நாள்.29.01.2021ன் படி அயிட்டம் 1 முதல் 6 வரை சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் பூங்காவும் 649/2021, நாள்.29.01.2021ன் படி பின் உபயோக இடம் சேர்த்து மொத்தம் 2696.26 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, மேற்படி மனைப்பிரிவுக்கு ஈரோடு நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களால் இறுதி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி பார்வை 05ல் காணும் உத்தரவின்படி ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக மேற்படி ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் பூங்கா ஆகியவற்றினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க பெருந்துறை தொகுப்பு இளநிலை பொறியாளரை கேட்டுக் கொள்ளப்பட்டது. பார்வை 7ல் காணும் கருமாண்டிசெல்லிபாளையம் தொகுப்பு இளநிலை பொறியாளரின் கடிதத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் பூங்கா ஆகியவற்றினை ஆய்வு செய்து நல்லமுறையில் உள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

பார்வை 8ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.101/2021, நாள்.17.05.2021ன் படி, அயிட்டம் 1 முதல் 6 வரை சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் பூங்காவும் மொத்தம் 2605.39 சதுர மீட்டர் ஆகியவற்றினை தானசாசனம் பத்திரம் ஆவணங்களின் மூலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதை இப்பேரூராட்சியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பார்வை 9ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.102/2021, நாள்.17.05.2021ன் படி, பின் உபயோக இடம் 92.87 சதுர மீட்டர் ஆகியவற்றினை தானசாசனம் பத்திரம் ஆவணங்களின் மூலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதை இப்பேரூராட்சியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பார்வை 10ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.112/2021, நாள்.17.05.2021ன் படி, மேற்படி மனைப்பிரிவுக்கான அனைத்து கட்டணங்களையும் வசூலித்துக் கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட பார்வை 05ல் காணும் இறுதி தொழில்நுட்ப ஒப்புதலில் சிறப்பு நிபந்தனைகளில், மனைப்பிரிவுகளுக்கான தெருவிளக்கு வசதி செய்துள்ளதை உள்ளாட்சியால் உறுதி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 11 காணும் கடிதத்தின் படி

கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி பம்ப் மெக்கானிக் அவர்களுக்கு ஆய்வு செய்ய கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட பார்வை 05ல் காணும் இறுதி தொழில்நுட்ப ஒப்புதலில் சிறப்பு நிபந்தனைகளில், மேற்படி மனைப்பிரிவுக்கு அரசாணையின் படி தெரிவிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பில் 3 சதவீதம் வசூல் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்படி மனைப்பிரிவு சர்வே எண்களுக்கு நாளது வரையிலான சந்தை மதிப்பை தெரிவிக்கக் கோரி பார்வை 12ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் பெருந்துறை சார்பதிவாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

பார்வை 13ல் காணும் பெருந்துறை சார்பதிவாளர் அவர்களின் கடிதத்தில், மேற்படி மனைப்பிரிவின் சர்வே எண்களுக்கு நாளது வரையிலான சந்தை மதிப்பை தெரிவிக்கப்பட்டதில், அதன் விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மனுதாரரால் சந்தை மதிப்பில் 3 சதவீதத் தொகை ரூ. 90000/– மட்டும் உரிய அரசுத்தலைப்பில் பெருந்துறை பேங்க் ஆப் பரோடா வங்கிக் கிளையில் சலான் எண்.19, 21 /2021, நாள்.05.08.2021ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 14ல் காணும் கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி பம்ப் மெக்கானிக் அவர்களின் அறிக்கையின் படி தெருவிளக்குகள் வசதி செய்து தர தேவையான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

இப்பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய ஆய்வுக் கட்டணம், பரிசீலனைக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.65975/– சலான் எண்.601/2021 நாள்.05.08.2021ன் படி வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி மனைப்பிரிவுக்கு உரிய அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. பார்வை 05ல் காணும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதில் மனைப்பிரிவு நிபந்தனைகளில் வரிசை எண். 1 முதல் 20 வரை (உட்பிரிவுகள் அனைத்தும்), சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரைபடத்தில் கண்டுள்ளவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
2. பேரூராட்சி மற்றும் அரசு இதரதுறைகளுக்கு சொந்தமான எந்தவொரு இடமும் இந்த மனைப்பிரிவில் சேர்க்கக்கூடாது.
3. செயல் அலுவலரால் அவ்வப்போது கூறப்படும் அறிவுரைகளின் படி உரிமையாளர்கள் செயல்பட வேண்டும்.
4. தற்போது செலுத்தப்பட்ட மனைப்பிரிவு அங்கீகார கட்டணத் தொகைகள் குறைவு எனத்தெரிய வந்தாலோ அல்லது தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டாலோ வித்தியாசத் தொகையினை உடன் செலுத்தப்பட வேண்டும்.
5. இந்த மனைப்பிரிவில் எந்த ஒரு மாறுதல் செய்யப்பட்டாலோ மனைகள் உட்பிரிவாக பிரிக்கப்பட்டாலோ சம்பந்தப்பட்ட அலுவலரிடம் முறையாக அனுமதி பெறப்பட வேண்டும்.
6. ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் மனைப்பிரிவு வரைபடம் ம.வ/ஈ.மா.எண். 54/2021, நாள். 14.03.2021ல் தெரிவித்துள்ளபடி மட்டுமே மனைகளை விற்பனை செய்யப்பட வேண்டும்.

7. பெருந்துறை சார்பதிவக தானசாசனம் பத்திரம் ஆவணங்களின் படி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள், மூலை முடக்குகள் மற்றும் பொது இடங்கள் போன்ற இடங்களை எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது.
8. ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக இடங்களை பேரூராட்சிக்கு பட்டா மாறுதல் செய்து மனைப்பிரிவு உரிமையாளர்களால் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
9. மனைப்பிரிவின் இடையே செல்லும் குறைந்த மின்அழுத்த கம்பிப் பாதையை தங்களது சொந்த செலவில் சாலையின் போக்கில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. இந்த மனைப்பிரிவில் ஏதேனும் நீதிமன்ற வழக்குகள் மற்றும் வில்லங்க விவகாரங்கள் இருப்பின் என பின்னாளில் தெரியவந்தால் இவ்வுத்திரவு தானாகவே ரத்தாகும் என தெரிவிக்கப்படுகிறது.
11. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஈரோடு நகர் ஊரமைப்பு துறையின் அனைத்து நிபந்தனைகளும் பொருந்துவதாகும். நிபந்தனைகளை மீறி மனையிடங்கள் விற்பனை செய்யப்பட்டால் இவ்வலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய வரைவுக் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

5/8/2021
செயல் அலுவலர்
கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி
ஈரோடுமாவட்டம்

5/8/2021
5/8/21

**இணைப்பு**
1. மனைப்பிரிவு வரைபடம்–1.
2. நிபந்தனை கடிதம்–1.

**பெறுதல்**
திரு.R.கந்தசாமி த/பெ.ரங்கசாமி 1/15, ஜீவா நகர்,
80/1, R.S.ரோடு,
பெருந்துறை வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

**நகல்**
1. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக
3. ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக
4. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், பெருந்துறை அவர்களுக்கு தகவலுக்காக
5. வருவாய் வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பெருந்துறை அவர்களுக்கு தகவலுக்காக



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate